# வேளாள மரபிலக்கணச் சுருக்கம்.

இஃது
தென்னார்க்காடு ஜில்லா கள்ளக்குறிச்சித் தாலுக்கா
சின்னசேலம்
பிரசுரதாரரும், "செங்கமலம்" நூலாசிரியரும், வேளாளச் சங்க
ஸ்தாபகருமாகிய
S. துரைசாமிப் பிள்ளையவர்கள்
இயற்றியது.

வி. பரமனூர் ஸ்ரீமான் முத்துசாமிப் பிள்ளை குமாரர்
ஸ்ரீ. மு. இரத்தினசாமிப் பிள்ளையவர்களால்

விழுப்புரம்
ஹனுமான் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

Registered
...ED BY THE AUTHOR.
...33 [விலை அணா 4.

OFFICE OF THE REGISTRAR
4 OCT 192..

Y592V
N26
148618

# வேளாளர் மரபிலக்கணச் சுருக்கம்.

இஃது
தென்னாற்காடு ஜில்லா கள்ளக்குறிச்சித் தாலுக்கா
சின்னசேலம்
பிரசுரதாரரும், "செங்கமலம்" நூலாசிரியரும், வேளாளர் சங்க
ஸ்தாபகருமாகிய

S. துரைசாமிப் பிள்ளையவர்கள்

இயற்றியது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 OCT 1926
MADRAS

வி. மாமாந்தூர் ஸ்ரீமான் முத்துசாமிப் பிள்ளை குமாரர்
வி. மு. இரத்னசாமிப் பிள்ளையவர்களால்

விழுப்புரம்
ஹநுமான் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

*Registered*
COPY RIGHT RESERVED BY THE AUTHOR.

Price As. 4] 1926 [விலை அணா 4.

148618

# ஆசிரியர் முன்னுரை.

---

எண்ணிறந்த அரிய பெரிய கல்விவாணர்கள், புலவர்கள், பண்டிதர்கள், சாதுக்கள், மேன்மக்கட்கெல்லாம் பிறப்பிடமாய் விளங்கும் இச்சோழமண்டலத்தின்கண், இக்காலம் கல்வியுணர்ச்சி யென்பதே சிறிது மின்றி—உலக தற்கால போலி நிலைமையின் நன்மை தீமை யறியாதவர்களாய், அஃது அறிய சிறிதும் பிரியமில்லாதவர்களாய், மதவொழுக்கம் ஜாதி யொழுக்கம் இழந்தவர்களாய், புறச்சமயவாதிகட்கு இடந்தந்தவர்களாய், என்னைச் சுற்றிலும் வாழ்கின்ற கிராமவாசிகளை ஆங்காங்குக் கூட்டி, அவர்கட்கு நல்லொழுக்கம் போதிக்கவேண்டுமென்ற எண்ணம், என் மனதில் தோன்றி பன்னாளாய் வளர்ந்துகொண்டிருந்தது.

வி. மாமாந்தூர் என்ற கிராமத்தில் வெகு உத்தமரென எவர்குந் தெரிய வாழ்ந்தவரும், என்பால் பேரன்பு பூண்டவருமாகிய காலஞ்சென்ற ஸ்ரீமான் முத்துசாமிப் பிள்ளையவர்களின் நற்புத்திரரும், சிறந்த தமிழ்ப் பண்டிதராகிய கூகையூர் வீரமாகேஸ்வரர் சின்னசாமி அய்யாவர்களின் மாணவருமாகிய இரத்தினசாமிப் பிள்ளை என்பவர் "வேளாளர் மகா சங்கம் ஒன்று கூட்டி நல்லொழுக்கம் போதிக்கவேண்டும்" என வெகு தீவிரமாய் என்னிடம் கூறினர்.

என் எண்ணங் கைகூடுதற்கு நற்காலம் வந்ததெனக் கருதிய யான்,—அவரோடும், இவ்விஷயத்தில் ஊக்கங்காட்டிய அம்மையாபுரம் இராமசாமிப் பிள்ளையொடும்,—பல்கிராமங்கட்குச் சென்று ஆங்காங்குள்ள வேளாண் மரபினர்களோடு பேசி 16—9—26-ல் அம்மையாபுரம் கிராமத்தில் மகாச்சங்கம் கூடும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டேன்.

பிறகு, வேளாள மரபிலக்கணத்தைப் பற்றி ஒரு நூல் எழுதி அச்சிட்டுச் சங்கத்திற்கு வரும் அம்மரபினர்கட்குக் கொடுத்து உதவுதல் நலமென மேற்படி இரத்தினசாமிப் பிள்ளையவர்கள் என்னிடங் கூறி, அந்நூலை எழுதுமாறும் கேட்டுக்கொண்டனர். நாளில்லாமையால் சுருக்கமாய் இந்நூலை எழுதினேன். இன்னும் விரிவாய் இஃதை எழுதவேண்டுமெனவும், மாதாந்தரப் பத்திரிகை வாயிலாய் வெளியிட்டுப் புத்தகமாக்குதல் அஃதை சிரமமின்றி முடிக்கும் வழியாகுமெனவும் அவர் கூறுகின்றனர். அஃது எற்கும் ஒப்பானகாரியமே. ஈசன் அருள்புரிதல் வேண்டும்.

சின்னசேலம்,
10—9—26.

இங்ஙனம்,
S. துரைசாமிப் பிள்ளை.

4592U
M26

## வேளாளர்கள் சிவனருளால் கங்கையினிடம் தோன்றினர்கள் என்பது.

பூர்வகாலத்திலே ஒரு நாள் உமாதேவியானவள், சிவபெருமானை நோக்கி — ஆகாயத்தில் விளங்கும் சூரிய சந்திரர்கள் யாவர்? என்று வினவ, சிவபெருமான் தனது இருகண்களே சூரிய சந்திரர்களெனக் கூறினர். உமாதேவி, அங்ஙனமாயின் உமது இருகண்களையும் மூடிக்கொண்டால் உலகமெங்கும் இருளடைந்து விடுமோ? என்றனர். சுவாமிகள் “ஆம்” என்றனர். தேவியார் அப்படியானால் அதைப் பரிக்ஷித்துப் பார்ப்பேன், என்று விளையாட்டாய் சுவாமிகளின் கண்களை தனது கைகளால் மூடிக்கொண்டனர். உடனே உலகமெங்கும் இருள் சூழ்ந்து கொண்டது. உலகத்தார் இதை சகியாதவர்களாய் சிவபெருமானைத் துதித்தனர். சிவபெருமான் கருணைகொண்டு தமது நெற்றிக்கண்களைத் திறந்து இருளைப்போக்கி யருளினர். உமை உடனே கைகள் இரண்டையும் எடுத்துக்கொண்டனள். தேவியின் மெல்லிய தேகத்தில் நெற்றிக்கண்ணின் வெப்பந் தாக்கவே தேகத்தினின்று வியர்வை பொங்கி கங்கையாகப் பெருகி ஓடிற்று. இக்கங்கை வீணாகாதபடி, இதன் உதவியால் உலகத்தில் வேளாண்மையைச் செழித்தோங்கச் செய்யவேண்டுமெனத் திருவுளங்கொண்ட சிவபெருமான், அதைச் செய்யத் தகுதியாய சிறப்புத் தன்மை வாய்ந்த மாந்தர்களையும் உண்டாக்கக் கருதினர். உடனே அவரருளால் அக்கங்கையினிடம் எண்ணிறந்த மாந்தர்கள் தோன்றினர். வேளாண்மைக்கென தோன்றினவர்களாதலின் அம்மாந்தர்கட்கு வேளாளர் எனப் பெயராயிற்று; அதாவது வேளாண்மைக்குத் தலைவர் என்பது அதன் பொருள். கங்கையின் பெருக்கானது உலகத்தை யழிக்குமென்றஞ்சி, சிவபெருமான் அக்கங்கையை வாரி யெடுத்து, தனது சடாமகுடத்தில் வைத்துக் கொண்டு அதன் ஆற்றலை யடக்கினர். வேளாளர்கள் கங்கையினிடம் தோன்றினமையால் கங்கை புத்திரர்கள் எனப் பெயர் பெற்றனர்.

## உமாதேவி கைலையினின்று வேளாளர்களொடு பூலோகம் வந்து அறம் வளர்த்தாளென்பது.

இது நிற்க, அம்மையார் எழுந்து சிவபெருமானை நோக்கி “உலகுயிர்களை துன்பமடையும்படி சுவாமிகளின் கண்களை யான் மூடிய பாவம் எவ்வாறு அகலும்” எனக் கேட்டனள்.

ஈசனும் அங்குரைத் தருள்வான் உனை வினைவந்தணுகாதே யெனினும் யார்க்கும்
மாசகலும் படிக்கு அரியதவம் புரிய விரும்பினையேல் மதுரை*மாயை
காசி† அவந்தி துவாரை அயோத்தியினும் சிறப்புடைய காஞ்சி மேவிப்
பூசை புரிந்து அரியதவம் புரியென்றான் விடைகொண்டாள் புகழ்ந்து போற்றி.

அதற்கு சுவாமி "நீ பூலோகத்திலுள்ள அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரை என்னும் ஏழு முத்தி நகரங்களில் சிறந்தாயுள்ள காஞ்சிக்குச் சென்று தவஞ்செய், யான் அங்கு வந்து இப்பாவம் ஒழியும்படி கிருபை செய்கின்றேன்," என்றனர் இதைக் கேட்ட உமாதேவியார் "யான் ஜீவர்கட்கு இம்சையுண்டாக்கியதால் அதற்கு ஈடாக அவர்கட்கு இதமுண்டாகும்படி அறம் வளர்க்கவேண்டுமென விரும்புகின்றேன்" என்றனள். சிவபெருமான் அதற்கிணங்கி இருநாழி நெல்லளித்து "கங்கையினிடம் தோன்றிய வேளாளனொடு, இதை பூலோகத்திற்கு எடுத்துச் சென்று, உழவு தொழிலால் இந்நெல்லைப் பெருக்க, அறம் வளர்ப்பாய்" எனக் கிருபை செய்தனர். அங்ஙனமே உமாதேவியார், கங்கையிற் பிறந்த வேளாளனை அழைத்துக்கொண்டு, சிவபெருமான் அளித்த இருநாழி நெல்லையுங் கைக்கொண்டு, பூலோகத்தை யடைந்து, கங்காநதி தீரத்தில் வேளாளரில் சிலரை நிறுத்தி, அவர்கட்கு சிவபெருமான் தந்த நெல்லில் சிறிது கொடுத்து, அதை உழவு தொழிலால் பெருக்கி—பயிரிடல், பசுகாத்தல், மண்டமான்றல், ஈதல், வேதமோதல், வேள்விசெய்தல் ஆகிய அறுதொழில்களைச் செய்து—அதுலர்க்குச்சாலை ஓதுவார்க்குணவு, அறுசமயத்தார்க்குண்டி, பசுவுக்கு வாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டம் நல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவு வளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப் பிணஞ்சுடுதல், அறவைத் துரியம், சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர் காத்தல், தண்ணீர்ப் பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சிதறி, விலங்கிற்குணவு, ஏறு விடுதல், விலை கொடுத்துயிர் காத்தல், கன்னிகாதானம் ஆகிய முப்பத்திரண்டு அறங்களையும் வளர்க்க வேண்டுமெனப் பணித்தருளி,

---

* மாயை — அரித்துவாரம்.

† அவந்தி — உஞ்சை.

பின்னர் காசி நகரடைந்து, விசுவேசுரரைப் பூசித்து, அந் நாடு தழைத்தோங்கக் கிருபைசெய்து;

பின்னர் தொண்டை நாட்டின் பிரதான நகராகிய காஞ்சி புரத்திற்கு எழுந்தருளி, தன்னொடு வந்த வேளாளருக்குச் சிவ பெருமான் தந்தருளிய உணவின் மூலத்தைத் தந்து—அவற்றை உழவாற் பெருக்கி, அறு தொழில்களையும் 32 அறங்களையும் வளர்த்து, தொண்டைநாட்டில் வாழும்படி—அவரவர்கட்குக் கட்டளையிட்டருளி, காஞ்சியிலுள்ள ஏகம்பவாணரை நோக்கி தவஞ் செய்தனள்.

## வேளாளர் முதன்முதல் குடியேறிய நாடுகள் எவை என்பன.

இதனால் வேளாளர்கள் முதன்முதல் வடநாட்டிலுள்ள கங்காநதி தீரத்திலும், தென்னாட்டிலுள்ள தொண்டைநாட்டிலும் குடியேறினார்கள் என்பது நமக்கு விளங்குகின்றது.

கங்காநதி என்பது இமாலய பர்வதங்களுக்கு வடக்கே கண்ணுக்கெட்டாத தூரத்திலிருந்து உற்பத்தியாகி தென்முக நோக்கி இந்தியாவின் சமபூமிகள் வழியாகப் பாய்ந்து கிழக்கு முகமாகத் திரும்பி இமயமலை அடியோரமாய் 1500 மைல் தூரம் வெகு கெம்பீரமாய் ஓடி கல்கத்தாவிற்கு அருகாமையில் கீழ் சமுத்திரத்தில் கலக்கின்றது. இந்நதிதான் சிவனது சடா மகுடத்தினின்று இழிந்து வருவதாய் சுருதிகள் கூறுகின்றன. இந்நதியின் இருபக்கங்களிலுமுள்ள செழுமிய நிலங்களெல்லாம் கங்காநதி தீரமேயாகும். இங்குதான் உமாதேவியானவள் கைலையினின்று அழைத்து வந்த வேளாளரில் ஒரு சிலரை நிறுத்தினள் என்பது.

## சோழநாட்டின் தென்பகுதிக்குத் தொண்டைமண்டலம் எனப்பெயர் எங்ஙனம் வந்ததெனல்.

இனி தொண்டைநாட்டின் விபரம் தெரிந்துகொள்வோம். முற்காலத்தில் தென்னாட்டை மூன்று பகுதிகளாய் சேர சோழ பாண்டியர்கள் அரசாண்டனர். அப்பகுதிகட்கு சேரமண்டலம், சோழமண்டலம், பாண்டியமண்டலம் எனப் பெயர் வழங்கியது.

* சோழராஜன் ஒரு காலத்தில் வனவேட்டைக்குச் சென்ற போது, ஒரு ரிஷியாச்சரமத்திலிருந்த நாககன்னிகையைப் பார்த்துப் பிரியங்கொண்டு, அங்கு கிடைத்த ஆதொண்டபுட்பங்களால் மாலைகட்டி, அம்மாலையை அவள் கழுத்தில் சூட்டி, அவளை நாயகியாக்கி, அவளொடு கலவி செய்து, அவளுக்கு ஜனிக்கும் புத்திரனுக்குத் தன் அரசைக் கொடுப்பதாய் வாக்களித்து வந்தான். அவளுக்குப் புத்திரன் பிறந்து ரிஷியாச்சரமத்தில் ஆதொண்டன் என்னும் பெயர்பூண்டு பலகலைகளையும் கற்று சாமர்த்தியனாய் வளர்ந்து வந்தான். பிற்காலத்தில் சோழராஜனது பட்டஸ்திரியின் கர்ப்பத்திலும் ஓர் புத்திரன் தோன்றி வளர்ந்தான்.

சோழராஜன் நாககன்னிகையின் புத்திரனை மறந்து, பட்டஸ்திரியின் புத்திரனுக்குப் பட்டங்கட்ட எத்தனித்தான். இச்சமயத்தில் நாககன்னிகையின் புத்திரன் அரசன் சமுகத்தில் தோன்றி, பட்டத்திற்குரிய தனது சுதந்தரத்தைத் தனது தாயினிடமிருந்து உணர்ந்தவாறு கூறினன். இஃதைக் கேட்ட அரசன் முன்னர் சந்தேகித்து பின்னர் சந்தேகந்தெரிந்து தனது நாடாகிய சோழமண்டலத்தை இருகூறாக்கி பெண்ணையாற்றிற்கு வடக்குள்ளதை நாககன்னிகையின் புத்திரனுக்கும், தெற்குள்ளதைப் பட்டஸ்திரியின் புத்திரனுக்கும் அளித்தனன். நாககன்னிகையின் புத்திரனாகிய ஆதொண்டன் காஞ்சிபுரத்தைத் தலைநகராக்கி அதிலிருந்து அரசாண்டான். ஆதொண்டன் அரசாண்ட நாட்டிற்கு தொண்டநாடென்றும் தொண்டைமண்டலம் என்னும் பெயராயிற்று. அதன் எல்லைகள் :—வடக்கு-காளத்திமலை, கிழக்கு-கீழ்சமுத்திரம், மேற்கு-பவளமலை, தெற்கு-பெண்ணையாறு. இவற்றின் இடையில் 200 மைல் வட்டமாயுள்ளது இத்தொண்டை மண்டலம். இத்தொண்டை மண்டலத்தில்தான் உமாதேவியானவள் வேளாளர்களைக் குடியேற்றி அறம் வளர்த்தாளென்பது.

## வேளாளர்களின் குலம், கோத்திரம், சூத்திரம் என்னை என்பன.

உமையானவள் கயிலையினின்று வேளாளர்களோடு புறப்படுங்கால் வேளாளர்கள் அங்கிருந்த மரீசி, அத்திரி, அங்கீரசா,

* இச்சோழனைக் குலோத்துங்க சோழன் என்றும் மணிகண்ட சோழன் என்றும் கூறுகின்றனர். ஆராய்ச்சியால் திட்டமாய்த் தெரிதல் வேண்டும்.

புலத்தியர், பிலகர், கிரது, பிரசேதசு, வசிஷ்டர், பிருகு, நாரதர் முதலாய பல ரிஷிகளின் பாதங்களில் பணிந்தபோது ரிஷிகள் அவரவர்களை ஆசீர்வதித்து தங்கள் தங்கள் பெயரை அவரவர்கள் கோத்திரமாக அனுஷ்டிக்கும்படி அனுக்கிரகஞ் செய்தார்கள். வேளாளர்கள் பின்னர் போதாயன ரிஷியைப் பணிந்து நிற்க அவர் தம்மால் செய்த சாஸ்திரங்களை அனுட்டிக்கும்படி அனுக்கிரகித்தார். ஆகவே வேளாளர்கள் போதாயன சூத்திரம் உடையவர்களானார்கள். சூத்திரம் என்பது என்னையெனின் :—

1 சமாவர்த்தனம் (பிர்மசாரியை கிரகாச்சரமத்திற்கு உடன்படச் செய்தல்)

2 கலியாணம் (புருடன் பலரறிய ஒரு பெண்ணை தனக்குரியவளாக்கிக் கொள்ளல்)

3 சாந்தி முகூர்த்தம் (புருடன் மனைவியோடு கலத்தல்)

4 கர்ப்பாதானம்,
5 புஞ்சுவனம்.
6. சீமந்தம்.
(கர்ப்பத்தை நிலைக்கவைத்து வளரச் செய்யும் மந்திரக் கிரியைகள்)

7 சாதக கன்மம் (குழந்தைக்கு ஜாதகம் எழுதுதல்)

8 உத்தாபனம் (குழந்தை பிறந்த வீட்டின் தீட்டை மந்திரப் பூர்வமாய் நீக்கல்)

9 நாமகர்ணம் (குழந்தைக்குப் பெயரிடல்)

10 பிரவாசம் (குழந்தையை ஆலயத்திற்கு எடுத்துச் சொல்லல்)

11 அன்னப் பிராசனம் (குழந்தைக்கு முதன்முதல் அன்னங் கொடுத்தல்)

12 பிண்டவர்த்தனம் (குழந்தையின் வலக்காதில் பிரணவ மந்திரத்தை உபதேசித்தல்)

13 சௌளம் (குழந்தைக்கு க்ஷவரஞ் செய்வித்தல்)

14 உபநயனம் (பூநூல் தரித்தல்)

15 காண்டோபக்கிரமணம் (வேதம் அத்தியயனஞ்செய்ய ஆரம்பித்தல், தமிழ் வேதத்தை பண்ணொடு ஓதுமாறு பழக ஆரம்பித்தல்)

16 காண்டமோசனம் (ஜீவன் முக்தியாம் பொருட்டு யாகம்புரிதல் தேர்தல்)

முதலிய கர்மங்களை இன்னின்ன காலங்களில் இன்னின்ன விதமாய்ச் செய்தல் வேண்டுமென விதிக்குஞ் சட்டங்களாம்.

ஆகவே வேளாளர்கள் (கங்கையில் தோன்றினவர்களாதலின்) கங்காகுலத்தைச் சேர்ந்தவர்களென்றும், போதாயனச் சூத்திரத்தை யுடையவர்களென்றும் திட்டமாய்த்தெரிகின்றோம். கோத்திரம் மாத்திரம் எந்தெந்த ரிஷி எவரெவர்க்கு அனுகிரகித்தாரோ அவரவர்க்கு அந்தந்த ரிஷியின் பெயரே கோத்திரமாகும். இப்போது அவரவர்கள் தங்கள் கோத்திரப் பெயரை காலநீட்சியால் மறந்துவிட்டனர். அதற்கு ஈடாக அவரவர் குடும்பத்தில் முற்காலத்தில் யாரொருவர் பெயர்போக பிரசித்தியாக வாழ்ந்தவரோ அவருடைய பெயரைச்சொல்லி அவருடைய கோத்திரம் என்று சொல்லிக்கொள்கின்றனர். அது புதிய காலத்தில் தோன்றிய கோத்திரமே யாகும். பூர்வ கோத்திரத்தைப்பற்றி விசாரிக்கப் புகின் வேளாளர்களை ஆசீர்வதித்த ரிஷிகளில் புலத்தியர் என்பார் முதன்மை பெற்றவராதலின் புலத்திய ரிஷியின் கோத்திரம் என்பதே தகுதியாகும்.

இவ்விதமாக வேளாளர்கள் குலம் கோத்திரம் சூத்திரம் ஆகியவைகளைப் பெற்று, தொண்டை மண்டலத்தில் வாழ்ந்து, அறுதொழில்களையுந் தவறாது இயற்றி, முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்துவந்தனர்.

## வேளாளர்களின் பிரிவினைகள்.

காலாந்தரங்களில் இத்தொண்டைமண்டல வேளாளர்கள் சோழமண்டலம், பாண்டிமண்டலம், சேரமண்டலத்திலுள்ள துளுவநாடு, கொங்குநாடு முதலிய நாடுகளுக்குப் பரவிசென்று குடியேறினார்கள். சோழ மண்டலத்தில் குடியேறிய வேளாளர்கட்குக் காலஞ் செல்லச் செல்ல சோழிய வேளாளர் என்றும் துளுவநாட்டில் தங்கிய வேளாளர்கட்கு துளுவ வேளாளர் என்றும், கொங்குநாட்டில் பரவிய வேளாண் குடிகட்குக் கொங்கு வேளாளர் என்றும் பெயர் வழங்கத் தலைப்பட்டது. பாண்டி நாட்டில் சென்று தங்கிய வேளாளர்கட்குக் கார்காத்தார் எனப் பெயர் வழங்கியது. இதற்குக் காரணம் யாதெனில்:—உக்கிர பாண்டியன் அரசாண்ட காலத்திலே பாண்டிய நாட்டில் 12 வருடம் மழை இல்லாமல் போகவே அரசனுக்குக் கோபம் பிறந்து பொதிய மலையில் வந்து படிந்திருந்த மேகங்களைப் பிடித்துச் சிறையிலிட்டனன். தேவேந்திரன் அம்மேகங்களை மீட்கும்

பொருட்டு பாண்டியனோடு எதிர்த்துப் போர் புரிந்தான். ஆனால் பாண்டியனை வெல்ல இந்திரனால் இயலவில்லை. ஆகவே இந்திரன் மேகங்களை விடுக்குமாறு பாண்டியனைச் சமாதானமாய் வேண்டினன். பாண்டியன் இதற்கு வுடன்படாததால் இந்திரன் வேளாளர்களை உதவிபுரியுமாறு வேண்டினன். வேளாளர்கள் இவ்வேண்டுகோட்கிணங்கி பாண்டியனிடத்துப் *பிணையிருந்து மேகங்களைச் சிறைவிடுத்து உலகமெங்கும் மழை பெய்யச் செய்தனர். கார் என்னும் மேகங்களைச் சிறையினின்று விடுவித்துக் காத்தாராதலின் அவர்கட்குக் கார்காத்தார் என்றும் காராளர் என்றும், பல்லாண்டுகளாய் மழையில்லாது வருந்திய உலகமெங்கும் மழை பெய்யச் செய்து பூமியைப் பாலித்தாராதலின் பூபாலர் என்றும் பெயர் வழங்கின.

## வேளாளர்கட்குப் பிள்ளை, முதலியார், நயினார் முதலிய பட்டங்கள் எங்ஙனம் ஏற்பட்டதெனல்.

யார்பெற்ற மகனுக்கும் குமரன் (குமாரன்) என்பது பொதுப் பெயராயினும் உமாதேவி பெற்ற மகனாகிய சுப்ரமண்யருக்கு குமரன் என்னும் பெயர் சிறப்பாய் வழங்குவதைப் போன்றும், யார் பெற்ற குழந்தைக்கும் பிள்ளை யென்பது பொதுப்பெயராயினும் உமாதேவி பெற்ற மூத்தமகனாகிய விக்நேஸ்வரர்க்கு பிள்ளை என்பதோடு நில்லாமல் பிள்ளையார் என்னும் சிறப்பின் மேல் சிறப்பாய் பெயர் வழங்குவதைப் போன்றும், கங்கையினிடம் சிவபெருமானருளால் தோன்றிய பிள்ளைகளாகிய வேளாளர்கட்கு பிள்ளை என்னும் பட்டம் சிறப்பாய் வழங்கியது.

தொண்டை மண்டலத்தில் முதன்முதல் குடியேறிய வேளாளர்கள் பிள்ளை யென்னும் பட்டத்தைத்தான் வகித்து வந்தனர். அவர்களினின்று பிரிந்து பாண்டி நாட்டுக்குச் சென்று வாழ்ந்த வேளாளர்களாகிய கார்காத்தார்கள் இன்றும் பிள்ளை என்னும் பட்டத்தை விடாது வகித்து வருகின்றனர். தொண்டைமண்டலத்திலேயே நெடுங்காலம் வாழ்ந்த வேளாளர்கள் பல்துறையிலும் முதன்மையாய் வாழ்ந்தார்களாதலின் அவர்கள் முதலியார் என்னும் பட்டத்தை வகித்துக்கொண்டனர். அவர்கள் இன்னும் அப்பட்டத்தை விடாது வகித்து வருகின்றனர். கார்காத்தார்களில் முதன்மையாய் வாழ்ந்த சிலர் பிள்ளை என்பதற்கு பதிலாக நயினார் என்னும் பட்டத்தை வகித்துக் கொண்டனர். துளுவ நாட்டுக்குச் சென்றவர்கள் நாயகர் என்

* பிணை = ஜாமீன்.

றும், கொங்கு நாட்டில் குடியேறியவர்கள் கவுண்டர் என்றும் நாட்டின் வளப்பத்திற்குத்தக பட்டம் வகித்துக் கொண்டனர்.

## வேளாளர் சைவர் அசைவர் என்பது.

அவாவர்கள் குடியேறிய நாட்டில் வசித்த ஜனங்களின் நாகரீகங்களும் பழக்க வழக்கங்களும் நீண்டகாலத்தில் சிறிது சிறிதாய் வேளாளர்களின் ஒழுக்க வழக்கங்களில் சென்று கலந்து சீர்கேட்டை விளைத்து விட்டது.

வேளாளர்கள் யாவரும் பூர்வத்தில் சிவனைத் தொழும் சைவர்களாயும், புலால் உண்ணாத சுத்த சைவர்களாயுமே இருந்தனர்.

தொண்டை மண்டலத்தில் வாழ்ந்தவர்களும், பாண்டிய நாட்டிற்குச் சென்றவர்களும் அரசர்கள் மெய்க்க சிற்றரசர் களைப்போல முதன்மையாய் வாழ்ந்தார்களாதலின் மற்றவர் களின் துராச்சாரங்கள் அவர்களில் அதிகம் பிரவேசிக்கக் கூட வில்லை. அவர்கள் இன்றும் சுத்த சைவர்களாய் பூர்வ ஆச்சா ரங்களில் சில பகுதிகளையேனும் விடாமல் அனுஷ்டித்து வரு கின்றனர்.

இயற்கையிலேயே நாகரீகம் குறைந்த நாடாகிய சேர மண் டலத்தின் பகுதிகளாகிய மலையாள தேசத்திலுள்ள துளுவ நாட்டிலும், கொங்கு நாட்டிலும் குடியேறிய வேளாளர்கள் அந் நாட்டினரின் வழக்கங்களில் கலந்து புலால் உண்ணலையும் காளி, பிடாரி முதலிய தெய்வங்கட்கு ஜீவபொலி கொடுத்தலையும் மேற் கொண்டதோடு நில்லாமல் மற்ற ஒழுக்கங்களிலும் வெகுவாய் சீர்கேடடைந்து விட்டனர்.

சோழமண்டலத்தில் குடியேறிய வேளாளர்களில் பெரும் பகுதியோர் அவ்விதமே புலால் உண்ணலையும் ஜீவ பொலி கொடுத்தலையும் ஒருவாறு மறைந்தும் அபூர்வமாயும் செய்து வருகின்றனர். ஒழுக்கத்திலோ வெகு தாழ்ந்த நிலைமைக்கு வந்து விட்டனர்.

## வேளாளர் வைசியரென்பதும் பூவைசியரென்பதும்.

இனி,—பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென, வட மொழி வழக்காயும், அந்தணர், அரசர், வேளாளர், தொழி லாளர் எனத் தென்மொழி வழக்காயும் வழங்கும் வருணங்களில் வேளாளர் எவ்வருணத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை ஆராய்ந் தறிவோம்.

## பிங்கல நிகண்டு 773-ம் சூத்திரம். வைசியர் பொதுப்பெயர்.

"தாளாளர் இப்பர் தருமக்கிழவோர்
வேளாளர் இளங்கோக்கள் வைசியர் பொதுப்பெயர்."

இதன் பொருள் என்னை எனின், வைசியர்கட்குத் தாளாளர் என்றும் இப்பர் என்றும் தருமக்கிழவோர் என்றும் வேளாளர் என்றும் இளங்கோக்கள் என்றும் பெயர்களுண்டு என்பதாம். இதனால் வேளாளர் வைசிய வருணத்தாரெனத் தெரிகின்றது.

## பிங்கல நிகண்டு 774-ம் சூத்திரம். வைசியர் முத்தொழிலின் பெயர்

"கோக்களைக் காத்தலும் மாப்பொருளீட்டலும்
ஏர்த்தொழில் மூன்றும் வைசியர்தம் தொழிலே"

இதன் பொருள் என்னை யெனின், வைசியர்கள் கோக்களைக் காத்தல், பொருளீட்டல் ஏர்த்தொழில் என மூன்று தொழில்களை யுடையவர்கள் என்பதாம்.

இதனால் கோக்களைக் காக்கும் வைசியர்கட்கு கோவைசியர் எனவும், பொருளீட்டும் வைசியர்கட்கு தனவைசியர் எனவும், பூமியில் ஏர்த்தொழில் செய்யும் வைசியர்கட்கு பூவைசியர் எனவும் பெயர் வழங்கலாயிற்று. இதனால் வேளாளர்கள் பூவைசியர் என்பதாயிற்று.

## பிங்கல நிகண்டு சூத்திரம் 778. பூவைசியர் அறுதொழிலின் பெயர்.

ஓதல் வேட்டல் உபகாரம் அந்தியும்
வாணிகம் பசுக்காவல் உழவு தொழிலென
புகன்றவை ஆறும் பூவைசியர் தொழிலே.

இதன்பொருள் என்னையோவெனின், வேதமோதல், வேள்வி செய்தல், ஈதல், வாணிகம், பசுக்காவல், உழவுதொழில் ஆகிய ஆறுதொழில்களும் பூவைசியர்க்குரிய தொழில்களாம் என்பதாம்.

இந்த ஆறு தொழில்களையுந்தான் அனுட்டித்து வருமாறு அறம் வளர்த்த உமாதேவியானவள் வேளாளர்கட்குப் பணித்தருளினள். ஆகவே வேளாளர்கள் வைசியர்களென்பது இதனாலும் விளங்குகின்றது.

இப்போது வேளாளர்கள் இவ்வறுதொழில்களையும் எவ்வாறு அனுட்டித்து வருகின்றனர் எனின் கூறுதும். வேளாளர்கள் தமிழ் வேதமாகிய தேவாரம் திருவாசகமாதிகளை ஓதுதலே வேதமோதுதலாம். தேவாரம் திருவாசகம் ஓதி சிவபூஜை பிதிர் சிரார்த்தமாதியன செய்து வருதலே வேள்வி செய்தலாம், பயிரிடுவித்து வருதலே வியாபாரஞ் செய்தலாம், பயிர் தொழிலுக்கு இன்றியமையாத துணையாகிய மாடு ஆடுகளைப் பரிபாலித்து வருதலே பசுகாத்தலாம், விபசாயத்தாலீட்டும் பொருள்களை அந்தணர் அதிதியாதிகட்கு தானங்கொடுத்து வருதலே ஈதலாம், ஈந்ததும் தாம் உண்டதும்போக எஞ்சியவற்றைப் பிறர்க்கு விலையாகவும் கடனாகவும் கொடுத்து வருதலே வியாபாரஞ் செயதலாம் என்க.

இனி—வேதமென்பது ருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய சதுர்வேதங்களே வேதங்களென்றும், தேவாரமாதியன வேதமல்லவென்றும் சிலர் அபிப்பிராயப் படுவார்கள். அது முற்றிலும் தவறும். எங்ஙனமெனின், இவ்விந்திய நாட்டை இருகூறுக்கி வடநாட்டுக்கு வடமொழியையும் தென்நாட்டுக்குத் தென்மொழியையும் கொடுத்திருக்குங் கடவுள் அவரவர்க்கு அவரவர் மொழியில் வேதத்தைக் கொடுத்திருப்பரோ யன்றி, ஒருவர்க்கு அவரறிந்த பாஷையிலும் மற்றொருவருக்கு அவரறியா பாஷையிலும் பாரபக்ஷமாய் வேதத்தைக் கொடுத்திரார். ஆகவே ருக்கு, யசுர் முதலிய ஆரியவேதங்கள் ஆரியபாஷையாகிய சமஸ்கிருதத்தில் இருப்பதால் தமிழ் மக்களாகிய நமக்கு நமக்குரிய பாஷையாகிய தமிழ்மொழியில் இருக்கும் வேதமாகிய தேவாரமே நமக்குரிய வேதமாம். தவிர, ஆரிய வேதத்தினும் தமிழ்வேதமே சிறப்புடைத்தாகும். எவ்வாறெனின் :—ஆரிய வேதங்களிலுள்ள தோத்திரங்களெல்லாம் பெரும்பாலும் இந்திரன், வருணன், குபேரன், அக்கினி முதலிய சாமான்ய தேவர்களைத் தோத்தரிப்பதாகவும், அத்தோத்திரங்கள் தற்பயனைக் கருதி பிறர் கேட்டை விரும்புவனவாகவும் இருக்கின்றன. தமிழ் வேதத்தில் அவ்வித வாக்கியம் ஒன்றேனும் காணுதற்கில்லை. அஃதில் கூறும் தோத்திரங்களும் பிரார்த்தனைகளும் முழுமுதற் கடவுளான சிவபரம்பொருளையே குறிப்பனவாகவும், நித்தியானந்த முத்தியையும் அதற்குச் சாதகமாயுள்ள வற்றையுமே

விரும்புவனவாகவும் இருக்கின்றன. ஆதலின் ஆரிய வேதத்திலும் தமிழ் வேதமாகிய தேவாரம் ஓதுதலே சிறப்புடைத்தாகும். வேளாளர் தேவாரம் ஓதுகின்றனர். ஆகவே அவர்கள் வேதம் ஓதுகின்றார்.

இனி,—வேள்வி யென்பது — வேளாளர் தேவாரம் திருவாசகம் ஓதி சிவபூஜை பிதிர் சிரார்த்தம் முதலியன செய்து வருதலே—என்பது பொருந்தாதெனவும், வேள்வியென்பது ஆரிய வேதத்தில் கூறியுள்ளபடி பசுக்கள், ஆடுகள், மான்கள், குதிரைகள் முதலியனவை மந்திரப் பூர்வமாய் தீயிலிட்டுச் செய்யும் யாகந்தான் வேள்வியென்றும் கூறுகின்றவர்கள் பலருளர். அது முற்றிலும் பொருந்தாக் கூற்றே. முன்னர் வேதமோதுதலைப் பற்றிக் கூறியபடி ஆரியவேதத்தில் கூறியுள்ளதெல்லாம் நமக்குரியதாகாது. "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை நன்று" அதாவது நெய்யை மிகுதியாகச் சொரிந்து ஆயிரம் யாகம் செய்வதினும் ஒன்றின் உயிரைக்கொன்று உண்ணாதது சிறந்தது என்று நமது வேதம் கூறுவதால் ஆரியவேதத்தில் கூறியுள்ள ஜீவஹிம்ஸை சம்மந்தமான வேள்வி வெகு இழிவுள்ளது மன்றி பெரும்பாவத்தைக் கொடுப்பதுமாகும். அங்ஙனமாயின் வேளாளர்கள் எவ்வித வேள்வியைச் செய்தல்வேண்டும், எவ்வித வேள்வியைச் செய்து வருகின்றனர் எனின், அவர்கள் சிவாகம விதிப்படிச் செய்யவேண்டுவதும், செய்து வருவதும் கீழ்க்கண்டவைகளாம். அவர்கள் சிவபூஜை செய்தலே பிர்மவேள்வி செய்தலாம், சிவபூஜா காலங்களிலும் விவாகாதி முக்கிய கர்மகாலங்களிலும் அக்கினிஹோமஞ் செய்தலே தெய்வவேள்வி செய்தலாம், சிரார்த்தஞ் செய்தலே பிதுர்வேள்வி செய்தலாம், அதிதிகட்கு அன்னமளித்தலே மானிடவேள்வி செய்தலாம், உண்ணும்போது காக முதலிய ஜீவராசிகட்கு பலியிடுதலே பூதவேள்வி செய்தலாம். சிவாகமங்கள் கூறும் வேள்விகள் இவையேயாகும். இவ்வேள்விகளையே வேளாளர்கள் அனுட்டித்து வருகின்றனர். பூவைசியர்களாகிய வேளாளர்களின் அறுதொழிலில் வேதமோதல் வேள்வி செய்தலாகிய இரண்டிற்கும் சந்தேக நிவர்த்திக் கூறினோம். மற்றுள்ள நான்கும் எவர்க்குந் தெளிவாய் விளங்குமாதலின் அவைகளை விடுத்து மேல் செல்லுவோம்.

இப்போது சில கேள்விகள் கேட்டு, அக்கேள்விகட்கு இதுவரை கூறியவைகளின்று பதில்கூறி சந்தேகந் தெளிவோம். வேளாளர்கள் என்ன வருணம்? வைசிய வருணம். என்ன வைசியர்? பூவைசியர். என்ன ஜாதி? வேளாள ஜாதி. என்ன வகுப்பு வேளாளர்? தொண்டைமண்டல வேளாளர், கார்

காத்த வேளாளர், சோழிய வேளாளர் துளுவ வேளாளர் போன்ற வகுப்புகளில் ஏதேனும் ஒன்று. என்ன குலம்? கங்கா குலம். என்ன கோத்திரம்? புலத்திய ரிஷி கோத்திரம். என்ன சூத்திரம்? போதாயனச் சூத்திரம். இவை தெரிந்த மேல் ஒரு சிறு ஆக்ஷேபணை உண்டாகலாம். அஃதென்னை எனின், வேளாள மரபினர் எல்லோரும் புலத்திய ரிஷி கோத்திரமாயின் ஒரே கோத்திரத்தார்களுக்குள் பெண் கொடுக்கல் வாங்கல் செய்தல் எங்ஙனம் பொருந்துமென்பதே. சிவனைத் தொழும் வேளாளர்களெல்லாம் பெரும்பாலும் ஆணும் பெண்ணும் சிவகோத்திரம் என்று கூறியே திருமணச் சடங்குகளை முடிக்கின்றனராதலின் ஒரே கோத்திரமா யிருத்தலால் பாதகம் ஒன்றுமில்லை.

## வேளாளர்களின் முற்காலச் சிறப்பு.

வேளாளர்கள் முற்காலத்தில் கல்வி, அறிவு, ஒழுக்கம், பக்தி, வீரம், தயை சாந்தம், ஈகை, பொறை, மானம், குலம், புகழ், சான்றாண்மை, மாண்பு, நாணம், வாய்மை, இன்சொல் விருந்தோம்பல், பெருமை, முதலியவைகளில் சிறந்து வாழ்ந்தனர் என்பதற்குப் பல சான்றுகளுள.

முடிசூட்டல்:—முடிசூட்டலாவது குடிகளை ஆளுகின்ற உரிமையை அரசனுக்குக் கொடுத்தலாம். அவ்வுரிமையை அரசனுக்குக் கொடுக்கும் சுதந்தரமும் மேன்மையும் வேளாளர்கட்கே உரித்தா யிருந்தன என்பதற்கு பல ஆதாரங்கள் இருப்பினும் விரிவஞ்சி இங்கு ஒரு ஆதாரங் காட்டுதும்,

கண்டன் கரிகாலனுக்கு முடிகவித்துக் காணி படைத்தோரும்
தொண்டை நாட்டின் நற்குடியாய்ச் சூழ அமைந்த தூயோரும்
பண்டு மனுநீதியைத் தொடுத்துப் பயின்றுவரும் சோழியரெனவே
மண்டு கீர்த்தி படைத்தோரும் வளஞ்சேர் சோழமண்டலமே.

துலாபாரம்:—அரசனை ஒரு தட்டிலும் சொர்ணத்தை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்து அச்சொர்ணத்தை அவ்வரசன் செய்த பாவம் நீங்குதற்காக தானங் கொடுத்தலாம். அரசனை நிறை பார்த்தலும், சொர்ணத்தை தானங் கொடுத்தலுமாகிய பெருமை வேளாளர்க்கே கொடுக்கப்பட்டிருந்த தென்பதை

தலா பாரம் தாங்கும் தனி அரசும், பொன்னும்
துலா பாரத் தட்டினில் தூக்கும் கை.

எனக் கம்பர் கூறிய திருக்கை வழக்கச் செய்யுளாலறிக,

மந்திரி உத்தியோகம். இவ்வுத்தியோகத்தையும் முற்கால அரசர்கள் பெரும்பாலும் வேளாளர்கட்கே கொடுத்து வந்தார்கள் என்பதை அநபாய சோழராஜன்பால் வேளாளராகிய சேக்கிழார் சுவாமிகள் அவ்வுத்தியோகம் பெற்று உலகெலாம் புகழ அரசாண்டு வந்ததையும், தாயுமானசுவாமிகள் அங்ஙனமே அவ்வுத்தியோகத்தைப் பெற்று புகழ்பெற நடாத்தி வந்ததையும் அவரவர் சரித்திரத்தைக்கொண்டு அறிவீர்களாக.

சேனாதிபதி உத்தியோகம். இவ் வுத்தியோகத்தை வேளாளரே அரசரால் கொடுக்கப் பெற்று நடத்தி வந்தனரென்பதைப் பெரிய புராணத்தில் கூறப்படும் வேளாளரான கோட்புலி நாயனார், மானக்கஞ்சாற நாயனார், ஏயர்கோன் கலிக்காம நாயனார், கலிப்பகை நாயனார் சரித்திரங்களால் தெளிக. சிவத்தையே பொருளெனக் கொண்ட வேளாள நாயன்மார் பதின் மூவர்களுள்ளேயே நால்வர் இச்சேனாதிபதி உத்தியோகத்தை வகித்தனரெனின் மற்றுள்ள லெளகீக வேளாளருள் இவ்வுத்தியோகத்தை வகித்திருந்தவர்கள் எத்தனைப் பெயர்கள் யிருந்திருத்தல் வேண்டு மென்பதை யோசித்துப் பாருங்கள்.

சமயாச்சாரியர்கள். சமயாச்சாரிய குரவர்களாகிய அப்பர், சம்மந்தர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரில் அப்பர்சுவாமிகள் வேளாளர் என்பதை அறிவீர்களாக.

நாயன்மார்கள். அநித்தியமாகிய உலக வாழ்க்கையை வெறுத்து, சிவமே பொருளெனக் கருதி, அவர்பால் பேரன்பு கொண்டொழுகி, முத்தியடைந்த 63 நாயன்மார்களில் பதின்மூவர் வேளாளர்களென்றறிக. அவர்கள்—இளையான் குடிமாற நாயனார், விறன்மிண்ட நாயனார், மானக்கஞ்சாற நாயனார், அரிவாட்டாய நாயனார், திருநாவுக்கரசு நாயனார், ஏயர்கோன் கலிக்காம நாயனார், மூர்க்க நாயனார், சாக்கிய நாயனார், சத்திநாயனார், வாயிலார் நாயனார், முனையடுவார் நாயனார், செருத்துணை நாயனார், கோட்புலி நாயனார் ஆகிய பதின்மூவர்களாம்.

ஞானப் புலவர்கள். ஞானப் புலமையில் உலகப் பிரசித்திப் பெற்றவர்களாகிய பட்டணத்துப் பிள்ளையார், தாயுமானவர், சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் ஆகிய மூவரும் வேளாள மரபினரே.

பெருநூலாசிரியர்கள். பெரு நூல்களாகிய இராமாயணம் பாரதம் ஆகிய இருநூல்களையும் இயற்றியவர்கள் வேளாள

மாபினர்களாகிய கம்பரும் நல்லாப்பிள்ளையு மாவர். இராமா யணத்தை நாடகமாய்ப் பாடிய அருணாசலக் கவிராயரும் வேளாண் மரபினரே. பெரியபுராணம் எழுதிய சேக்கிழார் ஸ்வாமிகளும் அம்மரபினரே.

சிறுநூலாசிரியர்கள். புகழேந்தியைப் போன்ற பல சிறு நூலாசியர்களில் பெரும்பாலோர் வேளாள மரபினரே யாவர்.

இலக்கணப் பண்டிதர்கள். ஆறுமுக நாவலர், சபாபதி நாவலர் ஆகிய பெரும்பண்டிதர்களும் யாழ்ப்பாணத்தினராயி னும் வேளாண் குடியினரே.

நீதிநூலாசிரியர். பல்துறையிலும் பல அரிய நூல்களை இயற்றியுள்ள குமாரகுருபர ஸ்வாமிகள் வேளாளரே யாவர்.

வேளாளரே பல்துறையிலும் சிறந்திருந்தனரெனவும், இத் தென்னாடு வேளாள மரபினராலேயே சிறந்து விளங்கிற்றெனவும் இதனால் நன்கு விளங்குகின்றது.

## இன்றைய நிலைமை.

சோழநாட்டின் நடு நாடாகிய நம் நாட்டின் கிராமங்களை யான் சுற்றிப்பார்த்ததில் கல்வி, ஒழுக்கம், ஆச்சாரம் முதலிய எல்லா வகையிலும் வேளாளர்களின் நிலைமை வெகு பரிதாப கரமாக இருக்கக் கண்டு பெரிதும் விசனித்தேன், விசனிக்கின் றேன்.

## சீர்திருத்தங்கள்.

உயர்குடியிற் பிறந்த வேளாண் மக்களே! நீங்கள் உங்க ளுடைய பூர்வ நன் நிலைமையை மறந்து விட்டீர்கள். தாழ்ந்த ஜாதி மக்களெல்லாம் நாகரீகத்தில் வெகு துரிதமாய் முன்னேறும் இக்காலத்தில் நாகரீகத்தில் தலைமை வகித்திருந்த நீங்கள் உங் களை மறந்து உறக்கங்கொள்ளாதீர்கள். உங்களைத் தட்டி எழுப்ப யான் முன்வந்துள்ளேன். நீங்கள் விருப்பங்கொண்டு எழுந்து யான் கூறுவதை விருப்பத்தோடு செவியேற்று, சிறிது சிறிதாய் முன்னேற்றம் அடையுங்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் கட்டாயம் ஒரு பள்ளிக்கூடமாயினும் வைத்து அதற்கு நல்லொழுக்கமுள்ள ஒரு ஆசிரியரை நியமனஞ்செய்யுங்கள்.

4592V
ND6

உங்களுடைய ஆண்மக்களையாவது குறைந்தது 13 வயது வரையிலேனும் பள்ளிக்குச் செல்ல விடுங்கள்.

**வேளாளர் விர்த்திபோதினி** என்னும் மாதாந்தப்பத்திரிகை ஒன்று உங்களுடைய விர்த்தியையும், முன்னேற்றத்தையுங், கருதி பிரசுரிக்க யான் கருதியுள்ளேன். அதை நீங்கள் வாங்கிப் படித்து அதன்படி நடக்க முயலுங்கள்.

உங்களுடைய கிராமப் பள்ளிக்கூடங்களி லேனும், சாவடி கோயில்களிலேனும், எல்லோரும் மாதம் ஒருமுறை விருப்பத்தோடு கூடி நல்லொழுக்கங்களைப்பேசி தெளியுங்கள்.

உங்களுடைய பெண்டுகளை அதிகாலையில் எழுந்து; காலைக்கடன் கழித்து; பல்துலக்கி; முகம், கால், கை, சுத்திசெய்து இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தித்து நெற்றியில் விபூதியேனும் குங்குமமேனும் அணியும்படிக் கட்டாயப்படுத்துங்கள். நீங்களும் அப்படி நடவுங்கள். உங்களுடைய பிள்ளைகளுக்கும் அவ்விதம் நடக்க கற்பியுங்கள்.

ஜலம் தலையிலேனும் தோளிலேனும் சுமந்து வருதல் பெண்டுகளுக்கு சில அசவ்கரியங்களைத் தருமாதலால் அப்பழக்கத்தை முற்றிலும் நீக்கல்வேண்டும். ஜலம் இடுப்பில்தான் கொண்டு வருதல் வேண்டும். வாய் திறந்த தவலை பானைகளில் ஜலம் கொண்டு வருதல் கூடாது. குறுகிய வாயையுடைய செம்பு பித்தளைக் குடங்களில் ஜலம் கொண்டு வருதல் வேண்டும். ஜலம் கொண்டு வரப் போம்போது ஒரு சிறு செம்பு எடுத்துச் சென்று அதில் ஜலம் கொண்டு வந்து காலை சுத்திசெய்து மனைக்குள் புகுதல் வேண்டும். இப்பழக்கத்தை உங்கள் மனைவிகள் அனுஷ்டிக்கும்படி செய்வீர்களாக.

புருடர்களாகிய நீங்கள் உங்கள் மனைவிகளைப் பிரிய வசனங்களால் சீர்திருத்தி நடத்தல் வேண்டும். இழிசொல் கூறி வைதலும், அடித்தலும், செருப்பாலடித்தலும் ஆகிய கொடிய செய்கைகள் குடும்பத்திற்கு மானக்கேட்டை விளைக்குமென்பதை நீங்கள் அறிவீர்களாக.

கற்புடைய ஸ்திரிகள்—புருடர் கோபிக்கையில் எதிர்மொழி சொல்லார்கள், புருடர் கோபித்து வைதுக்கூறினும் அதைச் சந்தோஷமாகக் கொள்ளுவார் [illegible] குறிப்

பறிந்து செய்வர், புருடனுக்கு அன்னம்படைத்து பின் உண்பர், புசித்துக்கொண்டிருப்பினும் அதைவிட்டு புருடர் அழைத்த அக்கணமே ஓடி வருவர், பாகம் செய்வதில் புருடனுக்கு இனியவை யறிந்து நலமாகச் சமைப்பர், புருடன் பிரியமாகப் புசிக்கும் பதார்த்தங்களைக் குறிப்பாகப் பார்த்திருந்து பின்னும் படைப்பர், புருடர் புசிக்கும்போது மூக்கைச் சிந்தினால் கையலம்ப ஜலம் விடுவர், விருந்தாளிகளைக் கண்டவுடன் பிரியமாகச் சமைத்து அவர்கட்கு அன்னமிடுவர். இவைகளும் இவைகளைப்போன்ற இன்னும் பல உத்தம செயல்களும் கற்புடைய ஸ்திரிகளின் செயல்களாம். இவைகளை உங்கள் மனைவியர்களுக்குப் போதித்து அவ்விதம் நடக்கும்படிச் செய்யுங்கள்.

வீடு, திண்ணை, பாத்திரங்கள் முதலியவைகளை எப்போதும் கண்ணாடிபோல் சுத்தமாய் வைத்திருக்கும்படி உங்கள் மனைவியர்களைத் தூண்டுங்கள்.

உங்கள் மனைவியர்கள் தினந்தோறும் தவறாமல் தலைமுதல் பாதம் வரையில் ஸ்நானஞ்செய்து புதுவுடை தரிக்கும்படிச் செய்யுங்கள். ஒருவர் இறந்த தினத்தில் இழவு கொண்டாடப் போகும் பெண்டுகள் தலைமுதல் பாதம்வரை ஸ்நானஞ் செய்தலும், மற்றை தினங்களில் இழவுகொண்டாடியப் பெண்டுகள் அவ்விதஞ் செய்யாது தலையை மாத்திரம் நனைத்துக்கொள்ளுதலும், சாதாரண நாட்களில் தலை கசக்கி இடுப்பொடு குளித்தலும், பலநாள்வரை குளியாதிருத்தலுமாகிய துராச்சார வழக்கங்களை அடியோடு பறந்தோடச் செய்யுங்கள்.

ஆணாயினும் பெண்ணாயினும் நின்று கொண்டேனும் நடந்து கொண்டேனும் உடைகளும் கால்களும் நனைய ஜல ஸ்பரிசஞ் செய்தல் அனுச்சாரமும் பெரிய மானக்கேடுமான காரியமாதலின் அவ்வழக்கத்தை அடியோடு தொலையுங்கள்.

வெளித்திண்ணையில் பெண்டுகளாய் பலர் கூடி, கால்களை தாராளமாய் நீட்டிப்போட்டு, நாணமின்றி, தேக அங்கங்களைப் பற்றிய ஞாபகமே யின்றி, சுங்கான் குடித்தலும், வெந்த புகையிலைக் கரியைத் திண்ணையில் தேய்த்து வைத்தலும், பின்னர் சுங்கான்களைத் திண்ணைத் தூண்களைச் சுற்றிலும் உதவுகொடுத்தாற்போன்று சாய்த்து வைத்தலும் ஆகிய கெட்ட வழக்கங்களை முற்றிலும் நீக்க முயலுங்கள்.

பெண்டுகள் வயோதியர்களாயினும் தேகத்தின் மேல்பாகத்தை மூடாமல், மேல்துணியை இடுப்பிலும் மார்பிலும் கட்டிக் கொண்டு, புருஷக்கூட்டத்தில் நாணமிலாது திரிதல் போவ மானமாதலின் அப்பழக்கத்தை வேரறுத்துக் கொல்லல் வேண்டும். சிறுமிகளும் மாங்கல்ய ஸ்திரிகளும் அவசியம் மார்க்கச்சைகள் (ரவிக்கைகள்) அணியும் வழக்கத்தை மேற் கொள்ளல் வேண்டும்.

அரிசி வியாபாரம் செய்தற்கு சிறு மூட்டைகளைத் தலையில் சுமந்து பாவிய பெண்டுகளாய்ச் சேர்ந்துகொண்டு பக்கத்துக் கிராமக் கடைகட்குச்சென்று விற்று வருதலும், உள்ளூர் கடைகட்கு ஏதேனும் பண்டமாற்றல் செய்தற்கு இளம்பெண்கள் போதலும், பெரும் பாதகத்தை விளைக்குமாதலின் அப்பழக்கத்திற்குத் திரும்பிப்பாராது செல்லும்படி விடை கொடுத்திடல் வேண்டும்.

தலைகட்கு எண்ணெயைக் காட்டாது, புதர்களைப்போன்று தலைமயிரை வளர்த்து, விரிதலையாய், உடைகளைத் தாறுமாறாய்த் தரித்துக்கொண்டு திரியும் பேய்களைப்போன்ற பெண்களை, ஏ புருடர்களே! சீர்திருத்தி நடத்துங்கள். அவர்களைக் காணுதலே பெரிய கெட்டசகுன மாகுமென்பதை அறியுங்கள்.

பெண்டுகள் வண்டசாலையிலும் புகையிலையை வாயிலடக்கி எச்சிலை உள் விழுங்கவும் முடியாது, துப்பவும் சவ்கரியமின்றி, வாய் நிறைய எச்சிலை அடக்கி வைத்துக்கொண்டு, திக்கு முக்கலாடிக்கொண்டு, யாரேனும் திடீரென ஏதேனுங் கேட்டால், வாயை வானத்திற்குத் தூக்கி, எச்சில் வெளிவாரதபடி காப்பாற்ற முயற்சித்துக்கொண்டு, அவசர வார்த்தை பேச வாயைச் சிறிது திறந்தமாத்திரத்தில், வாயிலுள்ள எச்சில் வெளிப் பாய்ந்து வண்டசாலையையும் அதிலுள்ள சாமான்களையும் *புனிதமாக்கிக்கொண்டு வாயின் உள்ளும் புறம்புமாக ஓடி தேகத்தையும் *புனிதமாக்கி விடுகின்றது. இஃதென்ன கொடுமை. ஏ! புருடர்களே!! உங்கள் பெண்டுகள் இதைச் செய்யாதிருக்கக் கவனியுங்கள்.

---

* அசுத்தஞ் செய்துகொண்டு என்பதற்கு பதிலாக புனிதமாக்கிக் கொண்டு என வேடிக்கையாய்க் கூறப்பட்டதென்க.

கிராமங்களில் நாட்டார் வீட்டுப் பெண்டுகள் தங்கள் வாயிலில் காத்துக்கொண்டிருக்கும் வெட்டியான்களைப் பெருமையாக அழைத்துக்கொண்டு தங்கள் தாய் வீடுகளுக்குப் போதலும், கட்டுசாதம் போன்றவைகளை கூடையில் வைத்து வெட்டியான் தலையில் தூக்கிச் செல்லுதலும், அனுச்சாரமும் இழுக்குமாதலின் அவ்வழக்கத்தை நிறுத்தி விடுவீர்களாக.

சிறுமிகட்கு காதிரண்டையுந் தொளைத்து, தக்கையிட்டு வளர்த்து தொங்கல் நகைகளை மாட்டும் வழக்கத்தையும், காதைச்சுற்றிலும் பல சில்லரை நகைகளை அணியும் வழக்கத்தையும் தொலைத்து, ஒரு சிறு கம்மலும், ஒரு கழுத்தணியும், கை காப்பும் அணியும் வழக்கத்தை மேற்கொள்ளல் நலமாகுமாதலால், உங்கள் சிறுமிகட்கு இவ்வழக்கத்தை யூட்டுங்கள்.

கிராமங்களில்—கலியாண காலங்களில் மணமகன் யாருடைய மாங்கல்யத்தையேனும் கடனாக வாங்கி மணப் பெண்ணின் கழுத்தில் கட்டி, சில தினங்களின் பின்னர் அதை வாங்கிக் கொடுத்து விடுகின்றான். பிறகு அம்மாங்கல்ய ஸ்திரி மாங்கல்யமின்றி விதவையைப் போன்று திரிகின்றாள். இது பெரும் வெட்ககரமான காரியம். ஒரு நூலிலேனும் சொந்தமாகச் செய்த மாங்கல்யத்தைத் தரித்து, அதை எப்போதும் தரித்திருக்கும்படிச் செய்வீர்களாக.

ருதுவுக்கு முன்னரும், சாந்தி முகூர்த்தத்திற்கு முன்னரும் புருடனை இழந்த கைம்பெண்கள் பலர் இருக்கின்றனராதலின், பெண்கள் ருதுவானமேல் கலியாணஞ் செய்தல்வேண்டும், கலியாணச் சடங்கின் காலங்களிலேயே சாந்தி முகூர்த்தமும் செய்திடல் வேண்டும் என்னும் பழக்கத்தை மேற்கொண்டால் இளந்தலைக் கைம்பெண்களின் தொகை குறைந்துவிடுமாதலின், அப்பழக்கத்தை முன்னுக்குக் கொண்டு வருவீர்களாக.

கண்டவர்களோடு பந்தி உணவு உண்ணலையும், கண்டவர்கள் வீட்டில் உண்ணலையும் அறவே ஒழித்திடல் வேண்டும். ஆச்சாரம் சுத்தம் நோக்கி உண்டி கொள்ளல் வேண்டும்.

20 அல்லது 25 வயதுக்குள் அவசியம் சமயதீட்சை பெற்றிடல் வேண்டும். சிறந்த விரதங்களை புருட பாரியர் இருவரும்

பெரியோர்களைக்கொண்டு முறைப்படி ஆரம்பித்து அநுட்டித்தல் வேண்டும்.

புருடர்கள் குடித்த சுருட்டை மடியில் வைத்தலும், காதில் வைத்து எங்கும் திரிதலுமாகியகெட்ட வழக்கங்களை ஒழித்திடல் வேண்டும்.

புலாலுண்ணல், கட்குடித்தல், ஜீவபெலி கொடுத்தல், பிறன் மனை புகுதல், முதலிய பெரும் பாதகத் தொழில்களை அறவே நீக்கல் வேண்டும்.

இறந்தத் துக்கங் கொண்டாட, இறந்த 3 நாளைக்குள்ளும், 7-ம் நாளும், கருமாதி தினத்திலும், அதற்கு மறுதினத்திலுமன்றி மற்ற தினங்களிலாகிலும் பிற்காலத்திலாகிலும் போதல் கூடாது என்னும் நிபந்தனையைக் கைக்கொள்ளல் யாவர்க்கும் நலமாகும். குறிப்பிட்ட தினங்களில் போக முடியாதவர்கள் கடிதவாயிலாய்த் துக்க விசாரணை செய்து கொள்ளல் போதுமானதாகும்.

இறந்தார்க்குக் கொள்ளி வைத்தற்குரிய நெருப்புச் சட்டியை பறையரோ பரியாரியோ தூக்கிச் செல்லலும், பிணத்தை பிற ஜாதியார் தூக்கிச் செல்லலும் தகாததாகும். கொள்ளி வைத்தற் குரியவன் அதற்குரிய நெருப்பையும் தூக்கிச் செல்லல் வேண்டும்.

கிராம வீடுகளில் தண்ணீர் குடித்தற்கு உபயோகித்து வரும் பாத்திரங்களில் சில வெகு கனமுள்ளதாயும், சில குறுகிய கழுத்தினதாயும், சில பெருகிய வயிற்றினதாயும், மற்றுஞ் சில பெருத்த வாயினதாயும், கருத்த உருவினதாயும் இருக்கின்றன. சில பாத்திரங்களில் ஜலம் குடித்தால் ஜலம் வாய்க்குப் போகாமல் பாத்திரத்தின் பின்புறம் ஓடுகின்றது. பாத்திரத்தைப் பின்னுங் கொஞ்சம் சாய்த்தால் ஜலம் முன் பாய்ந்து முகத்தையும் உடலையும் உடையையும் நனைத்து விடுகின்றது. இப்பாத்திரங்களெல்லாம் பணங்கொடுத்து வாங்கியவைகள் தானே. தண்ணீர் குடித்தற்கு லேசாய் கையாளக்கூடியதும், உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் சுத்தமாயும் பளபளப்பாயும் வைத்துக்கொள்ள இடந்தாக் கூடியதும், ஜலத்தை வாய்க்கு நயமாய் செல்லவிடக்கூடிய வாம்புள்ளதும், நயமான விலையுள்ளதுமாகிய பாத்திரங்களை வாங்கி யனுபவித்தல் கூடாதா? ஏ! வேளாண்குல திலகர்களே! நீங்கள் இதைக் கவனியுங்கள்.

சொட்டையப்பிள்ளை, சாக்கப்பிள்ளை, குட்டியாப்பிள்ளை, மெக்காயி, தாவாயி, கருப்பாயி போன்ற அநாகரீக அருவருப்புப் பெயர்களை, உங்கள் சிறுவர்களுக்கும் சிறுமிகட்கும் வைத்து அழையாதீர்கள். சிவசுப்ரமண்யம், பால சுப்ரமண்யம், சிவலிங்கம், சுந்தரலிங்கம், என்பனபோன்ற பெயர்களை சிறுவர்கட்கும், சிவபாக்கியம், சிவானந்தம் போன்ற பெயர்களை சிறுமிகட்கும் வைத்து அழையுங்கள்.

சோழநாட்டின் நடுநாடாகிய நம்நாட்டிற்கு மத்தியஸ்தானமாகிய அம்மையாபுரம் என்ற கிராமத்தில் வேளாளர் சங்கம் என்று ஒரு சங்கம் ஸ்தாபித்தும் அதற்குக் கிளைச் சங்கங்கள் கிராமங்களில் ஸ்தாபித்தும் அதன் வாயிலாய்ச்சீர்திருத்தம் அடையக் கருதுங்கள்.

கல்வி ஒழுக்க மாதிய எல்லா வகைகளிலும் நீங்கள் முன்னேற்றம் அடைந்து உங்களுடைய பூர்வ நிலைமையை நீங்கள் எய்தும்படி எல்லாம் வல்ல எங்கணும் நிறைந்த கருணையங் கடவுள் அருள் சாதிப்பாராக.

Y592V
N26
148618
சென்னை-600 008

## "செங்கமலம்"

ஓர் அற்புத கெவுளி நூல்.

இது விவசாயிகள், வியாபாரிகள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள் முதலிய எல்லாவகை முயற்சியாளர்க்கும் எதிர்காலப் பலன்களைத் தெரிதற்கு வெகு சிறந்த நூல்.

விலை அணா 12.

---

## கலியாணக் கப்பல் பாட்டு.

கலியாண காலங்களில் சிறுமிகள் கண்டபடியெல்லாம் பாடி வரும் அநாகரீகப் பாட்டுகளைப் புறம்பாக்கி, இல்லற ஒழுக்கங்களையும் நீதி சாஸ்திரங்களையும் இப்புத்தகம் இனிய பாட்டுகள் மூலமாய் போதிக்கின்றது.

விலை அணா 1.

---

## காலச்சக்கர கணித விளக்கம்.

விலை அணா 12.

## சோதிட திசாபுக்தி பலன்.

விலை ரூ 2.

மேல்கண்ட இரண்டு சோதிட நூல்களும் அச்சில் இருக்கின்றன. காலச்சக்கர கணிதம் சோதிடர்களுக்கே பிரயோசனமானது.

சோதிட திசாபுக்தி பலன். சோதிடம் தெரியாத எவரும் இந்நூலைக்கொண்டு தங்கள் ஜாதகப்பலனைக் கஷ்டமின்றி தெரிந்து கொள்ளலாம்.

இப்போதே ஆர்டர் செய்கின்றவர்களுக்கு விலை நயமாய் அனுப்பப்படும்.

கிடைக்குமிடம் :—

S. துரைசாமிப்பிள்ளை,

சின்னசேலம்.

S. Arcot